முழுப் பதிப்புரிமையுடையது All Rights Reserved] 

கல்வி அமைச்சு கல்வி அமைச்சு கல்வி அமைச்சு கல்வி அமைச்சு கல்வி அமைச்சு
Ministry of Education, Ministry of Education, Ministry of Education, Ministry of Education

**கல்வி அமைச்சு**
**சமயம் மற்றும் விழுமியக் கல்விக் கிளை - இந்துசமயம்**

கல்விப் பொதுத் தராதரப் பத்திர(உயர்தர)ப் பரீட்சை - 2024
**General Certificate of Education (Adv. Level) Examination - 2024**

இந்துநாகரிகம் II
**Hindu Civilization II**

**46 T II**

*மூன்று மணித்தியாலம்*
***Three hours***

மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time – 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும் போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

**அறிவுறுத்தல்கள்:**

பகுதி I இலிருந்து எவையேனும் இரண்டு வினாக்களையும், பகுதி II இலிருந்து எவையேனும் மூன்று வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

## பகுதி – I

*01)* இந்துமத மரபில் மகாபுராணங்கள் பெறும் முக்கியத்துவத்தினை மேல்வரும் தலைப்புகளில் விளக்குக.
அ. புராணங்களின் வகைப்பாடு
ஆ. தத்துவ சிந்தனை
இ. புராணங்களின் அமைப்பு
ஈ. பிற்கால சமய மரபுகளில் புராணங்கள் செலுத்திய செல்வாக்கு

*02)* சோழர் காலத்தில் இந்துசமயம் பெற்ற செல்வாக்கினை மேல்வரும் தலைப்புகளில் ஆராய்க.
அ. இலக்கிய வளர்ச்சி
ஆ. அரசர்கள் சைவநெறி வளர்ச்சிக்கு ஆற்றிய பங்களிப்பு
இ. கலை வளர்ச்சி
ஈ. வைணவ சமய வளர்ச்சி

*03)* இந்து அறிவியல் துறைகளில் மருத்துவம் பெறும் முக்கியத்துவத்தினை மேல்வரும் தலைப்புகளில் விளக்குக.
அ. வடஇந்திய மருத்துவ வளர்ச்சி
ஆ. தென் இந்திய மருத்துவ வளர்ச்சி
இ. இந்துவழிபாடுகளில் மருத்துவ சிந்தனைகள்
ஈ. இந்து மருத்துவத்தின் முக்கியத்துவம்.

## பகுதி – II

*04)* அத்வைதக் கோட்பாட்டின் தத்துவ சிந்தனை மரபுகளை மேல்வரும் தலைப்புகளில் விளக்குக.
அ. பிரமாண நூல்கள் ஆ. பிரமம்
இ. ஆன்மா ஈ. முக்தி

*05)* இந்து தத்துவக் கோட்பாடுகளுள் சைவசித்தாந்தக் கோட்பாடு பெறும் முக்கியத்துவத்தினை மேல்வரும் தலைப்புகளில் பரிசீலிக்குக.
அ. பதியின் நித்தியத்தன்மை
ஆ. ஆன்மாவின் இயல்புகள்
இ. ஆணவமலம்

*06)* இந்துசீர்திருத்த இயக்கங்களில் ஆரியசமாஜம் பெறும் இடத்தினை ஆராய்க.

*07)* ‘இந்துக்களின் வாழ்வியலில் அறம் பிரதான இடம் வகிக்கின்றது’ இக்கூற்றின் பொருத்தப்பாட்டினை இலக்கியங்களை அடிப்படையாகக் கொண்டு விளக்குக.

*08)* இலங்கையின் சைவ வளர்ச்சியில் சைவப்புலவர் கா.அருணாசல தேசிகரின் பங்களிப்பினை ஆராய்க.